O.S. No: 55/2022

பெயர் : பாலசுப்ரமணியன்

**பி.சா.1**

23-07-2025

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் வாதி சண்முகம் , பிரதிவாதி சோமசுந்தரம் , விஜலெட்சுமி, ருக்மணி ஆகியோர் எனக்கு உறவினர்கள் என்றால் ஆமாம் . உறவினர்கள் என்பதால் அவர்கள் குடும்பத்தை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் ஆமாம் . சோமசுந்தரத்தின் தகப்பனார் செல்வகணபதி 2017 இல் இறந்தார் என்றால் ஆமாம் . அவர் இறக்கும் வரை வழக்கு நடக்கும் சொத்திற்கு முன்பகுதியில் தான் குடியிருந்தார் என்றால் ஆமாம். சோமசுந்தரம் இருக்கும் முன் பகுதிக்கு பின்னால் தான் ஆர்சிசி ஒட்டு வீடு கட்டி சண்முகம் குடியிருக்கிறார் என்றால் ஆமாம் . சண்முகம் கட்டி வீடு 25 வருடத்திற்கு முன்பு கட்டியது என்றால் ஆமாம். அந்த வீடு கட்டும் போது செல்வகணபதி உயிருடன் தான் இருந்தார் . அவருக்கு இந்த விவரம் நன்கு தெரியும் என்றால் ஆமாம் . 1 முதல் 3 பிரதிவாதிகள் சண்முகம் வீடு கட்டிய விவரம் தெரியாது என்று சொல்வது தவறு என்றால் தெரியாது. செல்வகணபதி முன் பகுதியில் குடியிருந்த போது, முன்பகுதியில் இருந்து கொல்லை வரை போவதற்கு 8 அடி பொதுபாதை புழக்கத்தில் இருந்தது என்றாலும் அந்த பொது பாதை இன்றைய தேதிவரை உள்ளது என்றால் சரி . இன்று நீதிமன்றத்திற்கு பிரதிவாதிகள் யாரும் வரவில்லை என்றால் ஆமாம். ஜெயராமன் வந்திருக்கிறார். அவர் தான் என்னை கூட்டி வந்தார் என்றால் ஆமாம் . மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கும் என்னை அழைத்து சென்றது ஜெயராமன் தான் என்றால் எனக்கு தபால் வந்தது . அதன்பேரில் நான் போனேன் . மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கும் இந்நீதிமன்றத்திற்கும் என்னை அழைத்து வந்தது ஜெயராமன் தான் என்றாலும் இந்த வழக்கை முன்னின்று நடத்துவது ஜெயராமன் தான் என்றால் சரியல்ல . நான்

நேரடியாக சார் பதிவாளர் அலுவலகத்திற்கு பாகப்பிரிவினை பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட போய்விட்டேன். சண்முகமும் அங்கு நேராக வந்தார் என்றால் ஆமாம். அங்கு வைத்து தான் நான் அவரை பார்த்தேனா என்றால் ஆமாம்.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.